**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.217/2024 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த–பெ | பெரியகருப்பன் |
| ஊர்: | : | பொய்யலூர் | சமயம்: | |
| வயது: | : | 38/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2025**

------------------------------------------------------------------------------------------------

**26.03.2025**

**முதல் விசாரணை**

1) நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 30.08.2024 ம் தேதியிட்ட பாரத ஸ்டேட் வங்கி , தேவகோட்டை கிளை, **காசோலை (காசோலை எண் 001385 அசல் ம.சா.ஆ.1) ஆகும்**. கடந்த 04.10.2024 அன்று வங்கியில் காசோலை தாக்கல் செய்த **சலான் அசல் ம.சா.ஆ. 2 ஆகும்.** 08.10.2024 அன்று ம.சா.ஆ.1 காசோலை Payment stopped by drawer என்ற காரணத்திற்காக திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 18.10.2024–ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ. 4 ஆகும்.** வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான **அஞ்சலக ரசீது ம.சா.ஆ. 5 ஆகும்.** மேற்படி ம.சா.ஆ.4 அறிவிப்பை 22.10.2024 அன்று எதிரி பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புகை அட்டை ம.சா.ஆ.6) ஆகும்.** 01.04.2024 அன்று எழுதிக்கொடுத்த **கேட்பு கடனுறுதிசீட்டு அசல் ம.சா.ஆ.7 ஆகும்.** கடந்த 23.10.2024 அன்று புகார்தாரருக்கு கொடுக்கப்பட்ட **பதில்**

**அறிவிப்பு அசல் ம.சா.ஆ. 8 ஆகும்.** மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி